# மேல்நிலை - இரண்டாம் ஆண்டு - பொதுத் தமிழ்

## வினாத்தாள்கள் அமைய வேண்டிய முறை - மாதிரி வினாத்தாள்கள்

## Language - Part I - Tamil (Blue Print) 2005 - 2006

முதல் தாள் (செய்யுளும் இலக்கணமும்)

காலம் 3 மணி
மதிப்பெண் 100

**I.** குறுவினா : ஆறு வினாக்கள் கொடுக்கப்பட்டு நான்கனுக்கு (Open Choice) விடை எழுதச் செய்தல் வேண்டும். 4 x 2 = 8

**II.** பெருவினா : வாழ்த்து, தொகை நூல்கள், திருக்குறள், தொடர்நிலைச் செய்யுள் ஆகிய பகுதிகளிலிருந்து மட்டும் ஐந்து வினாக்கள் கொடுக்கப்பட்டு (Open choice) மூன்றனுக்கு விடை எழுதச் செய்தல் வேண்டும். 3 x 4 = 12

**III.** பெருவினா : சிற்றிலக்கியங்கள், மறுமலர்ச்சிப் பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள் ஆகிய பகுதிகளிலிருந்து மட்டும் ஐந்து வினாக்கள் கொடுக்கப்பட்டு (Open choice) மூன்றனுக்கு விடை எழுதச் செய்தல் வேண்டும். 3 x 4 = 12

**IV.** நெடுவினா : திருக்குறள் பகுதியில் ஒன்று, தொடர்நிலைச் செய்யுள் பகுதியில் ஒன்று, சிற்றிலக்கியங்கள் மற்றும் மறுமலர்ச்சிப் பாடல்கள் பகுதிகளிலிருந்து ஒன்று ஆக மூன்று வினாக்கள் கொடுத்து (Open Choice) ஒன்றனுக்கு விடை எழுதச் செய்தல் வேண்டும். 1 x 8 = 8

V. செய்யுள் பகுதியில் அமைந்துள்ள எவையேனும் இரண்டு அடிகளைக் கொடுத்து மாதிரி வினாத்தாளில் கொடுக்கப்பெற்றுள்ளது போல (20, 21 என) இரண்டு வினாக்கள் கொடுத்து, ஒன்றனுக்கு விடை எழுதச் செய்தல் வேண்டும். 4 x 1 = 4

**VI.** மனப்பாடம் : 1. (திருக்குறள் நீங்கலாகப் பிற பகுதிகளிலிருந்து) ஒரு செய்யுள் + பாவகை)

4 + 2 = 6

2. திருக்குறளிலிருந்து மட்டும் (தொடக்கம் 1. முடிவு 1 கொடுத்து) இரண்டு குறட்பாக்கள் 2 + 2 = 4

**VII.** 24. உறுப்பிலக்கணம் : ஆறு சொற்கள் கொடுத்து இரண்டனுக்கு விடை கேட்க வேண்டும்.

2 x 2 = 4

25. இலக்கணக் குறிப்பு : (தொடர், தொகை) ஆறு சொற்கள் கொடுத்து, தேவையாயின் உரியப்பகுதிக்குக் கோடிட்டுக் காட்டி மூன்றனுக்கு விடை கேட்க வேண்டும். 3 x 2 = 6

26. புணர்ச்சி : ஆறு சொற்கள் கொடுத்து இரண்டனுக்கு விடை கேட்க வேண்டும்.

2 x 2 = 4

27. பொருள் : திணை, துறை கொடுத்து ஒன்றனுக்கு விடை கேட்க வேண்டும். 1 x 4 = 4

28. அணி : செய்யுள் ஒன்றும், அணியின் பெயர்கள் இரண்டும் கொடுத்து ஏதேனும் ஒன்றனுக்கு விடை கேட்க வேண்டும். 1 x 4 = 4

**VIII.** பொருத்துக : நூல் - ஆசிரியர். சொல் - பொருள். திணை - முதற்பொருள் - கருப்பொருள் - உரிப்பொருள் - பொருத்துக வினாவாக (நான்கு மட்டும்) கொடுத்துக் கேட்க வேண்டும். 4 x 1 = 4

**IX.** உரிய விடையைத் தேர்ந்தெடுத்தல் : 16 கொடுக்க வேண்டும். (எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும். 16 x 1 = 16

**X.** கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக: திருக்குறளிலிருந்து மட்டும் கேட்க வேண்டும், 2 + 2 = 4

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

பொதுத் தமிழ்

மாதிரி வினாத்தாள்

பகுதி **I** - தமிழ் - முதல்தாள்

(செய்யுளும் இலக்கணமும்)

பதிவு எண் :

**Language - Part I - Tamil Paper I**

காலை : 3 மணி மதிப்பெண்: 100

குறிப்பு :1. விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2. வினா **VI** க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு (ஐந்து வரிகளில்) விடை எழுதுக. **4 x 2 = 8**

1. 'அன்புடை மரபின் நின் கிளையோடார வல்சி தருகுவென்' இதன்கண் அமைந்துள்ள இறைச்சிப் பொருளைச் சுட்டுக.
2. நடுங்க வரும் துன்பம் யாருக்கில்லை எனக் குறள் கூறுகிறது?
3. வீரமா முனிவர் இயற்றிய நூல்கள் யாவை?
4. அந்தாதி - விளக்குக.
5. சிறுவர்களுக்குத் தட்டாம் பூச்சி பிடிக்க நேரமில்லாதது ஏன் எனக் கவிக்கோ கூறுகிறார்?
6. 'தம்பிரான் தோழர்' என அழைக்கப்பட்டவர் யார் ? காரணம் யாது?

**II.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்குப் (பத்து வரிகளில்) விடை எழுதுக. **3 x 4 = 12**

7. 'நன்றே நம்பி குடிவாழ்க்கை' எனக் கம்பர் வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக.
8. தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனிடம் தோழி வரைவு கடாயவற்றை நக்கண்ணையார் வழி விளக்குக.
9. நன்றி செய்தாரது நட்பினை விடலாகாது என்பதை வள்ளுவர் எவ்வாறு விளக்கியுள்ளார்?
10. கோலியாத்து மொழிந்த இகழ்ச்சியுரைகள் யாவை?
11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள்?

**III.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்குப் (பத்து வரிகளில்) விடை எழுதுக. **3 x 4 = 12**

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை?
13. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகளாகக் குமரகுருபரர் கூறியுள்ளன யாவை?
14. சுவடிச்சாலையில் இருக்க வேண்டிய நூல்களாகப் பாரதிதாசன் குறிப்பிடுவன யாவை?
15. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை எனக் கவிஞர் சுரதா கூறியுள்ளார்?
16. நயினார் பதத் துணையை நாவில் வைத்துப் போற்றுபவர் அடையத் தக்கனவாக உமறுப் புலவர் கூறுவன யாவை?

**IV.** பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு (இருபது வரிகளில்) விடை எழுதுக. **1 x 8 = 8**

17. 'பொறையுடைமை' என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் குறள் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. மருண்மாலைப் போதில் கண்ணகி இணைந்து ஏங்கி உரைத்தவற்றையும் கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் வரைக.

19. மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

**V.** பின்வரும் செய்யுள் அடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4 x 1 = 4**

20. ''யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ?''

அ. இதில் 'கள்வன்' எனக் குறிப்பிடப்பட்டவன் யாவன்?

ஆ. இஃது யார், யாரிடம் கூறிய கூற்று?

இ. இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார்?

ஈ. இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

அல்லது

21. ''அலங்குதண் சோலை புக்கேன் அவ்வழி அணங்கன்னாளைக்
கலங்குதெண் டிரையிற்றாய கண்ணினீர்க் கடலிற் கண்டேன்''

அ. இதனைக் கூறியவர் யார்?

ஆ. யாரிடம் கூறினார்?

இ. 'தண் சோலை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எது?

ஈ. 'அணங்கன்னாள்' எனக் குறிப்பிடப்பட்டவள் யார்?

**VI.** 22. 'விற்பெருந்' என்று தொடங்கும் கம்பராமாயணச் செய்யுளை அடிபிறழாமல் எழுதி அதன் பா வகையையும் எழுதுக 4 + 2 = 6

23. 'எனைத் திட்பம்' எனத் தொடங்கும் குறளையும் 'தொழில்' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக 2 + 2 = 4

**VII.** 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 x 2 = 4

அ. புனைந்தோம் ஆ. முழங்கிய இ. சுழன்று.

ஈ. நிற்கின்றார் உ. வேண்டேன் ஊ. அறைந்தாய்

25. கீழ்க் கோடிட்ட தொடர்களுள் மூன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக. 3 x 2 = 6

அ. என்றடி <u>வாழ்த்துவாம்</u> ஆ. <u>மறவற்க</u> மாசற்றார்

இ. <u>தீதொரீஇ</u> ஈ. என் <u>காற்சிலம்பு</u>

உ. <u>சொல்லுமின்</u> பொதுவின் ஊ. <u>அகல்முகில்</u> உருக்கொடு

26. எவையேனும் இரண்டு சொற்களுக்குப் புணர்ச்சி விதி தருக. **2 x 2 = 4**

அ. கயன்முள் ஆ. பகலுறை இ. சின்னாள்

ஈ. பலவென்று உ. பைந்நிணம் ஊ. தினந்தினம்

27. சான்று தந்து விளக்குக. **1 x 4 = 4**

பொருண்மொழிக் காஞ்சித் துறை அல்லது முல்லைத் திணை

28. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.
- இச்செய்யுளில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

அல்லது

சொற்பொருட் பின்வருநிலை யணி அல்லது மடக்கணியை விளக்கி எடுத்துக்காட்டும் தருக.
**1 x 4 = 4**

**VIII.** பொருத்துக. **4 x 1 = 4**

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 29. குயில் பாட்டு | - | அப்துல் ரகுமான் |
| 30. அழகின் சிரிப்பு | - | சுரதா |
| 31. துறைமுகம் | - | பாரதியார் |
| 32. பால்வீதி | - | தாராபாரதி |
| | - | பாரதிதாசன் |

**IX.** உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **16 x 1 = 16**

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் ________

அ. சிவன் ஆ. திருமால் இ. முருகன்

34. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை ________

அ. 4 அடி முதல் 8 அடி வரை ஆ. 9 அடி முதல் 12 அடி வரை

இ. 13 அடி முதல் 31 அடி வரை

35. குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்து பாடியவர் ________

அ. பெருந்தேவனார் ஆ. வரந்தருவார் இ. கபிலர்

36. திருக்குறள் அறத்துப் பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை ________

அ. 70 ஆ. 38 இ. 25

. 37. 'வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே' என்று பாடியவர் ________

அ. பாரதிதாசன் ஆ. கவிமணி இ. பாரதியார்

38. சிலப்பதிகாரம் குறிப்பிடும் 'வரி' என்பது ________ வகையைச் சார்ந்தது.

அ. சந்தப் பாடல் ஆ. இசைப்பாடல் இ. கலிப்பாடல்

39. இராமாயணத்தில் 'சுந்தரன்' என்னும் பெயரால் வழங்கப்பெறுபவன் ________

அ. அனுமன் ஆ. இராவணன் இ. இலக்குவன்

40. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி ________

அ. சதுரகராதி ஆ. பேரகராதி இ. அரும்பத அகராதி

41. 'கவிராட்சசன்' என்று புகழைப் பெற்றவர் ________

அ. கம்பர் ஆ. ஒட்டக் கூத்தர் இ. இளங்கோவடிகள்

\- 42. 'திவ்விய கவி' என்னும் பெயரால் அழைக்கப்பட்டவர் ________

அ. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆ. ஒட்டக் கூத்தர்

இ. குமரகுருபரர்

43. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் ________

அ. மதுரைக் கலம்பகம் ஆ. நந்திக் கலம்பகம் இ. காசிக் கலம்பகம்

44. முக்கூடற் பள்ளு அமைந்த பாவகை ________

அ. சிந்துப்பா ஆ. ஆசிரியப்பா இ. வஞ்சிப்பா

45. பாரதிதாசன் வெளியிட்ட இதழின் பெயர் ________

அ. தேன் மழை ஆ. குயில் இ. தென்றல்

46. 'நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்' எனப் பாடியவர் ________

அ. பாரதியார் ஆ. பாரதிதாசன் இ. வாணிதாசன்

47. தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்ற உவமைக் கவிஞர் சுரதாவின் நூல் ________

அ. தேன் மழை ஆ. துறைமுகம் இ. சுவரும் சுண்ணாம்பும்

48. சைவத் திருமுறைகளில் சுந்தரர் தேவாரம் ________ யாக இடம் பெற்றுள்ளது.

அ. முதலாம் திருமுறை ஆ. ஏழாம் திருமுறை இ. பன்னிரண்டாம் திருமுறை

**X.** கோடிட்ட இடங்களை நிரப்புக. **2 + 2 = 4**

49. கொன்றன்ன ________ செயினும் அவர் செய்த
ஒன்றுநன் றுள்ளக் ________

50. சொல்லுதல் ________ எளிய; அரியவாம்
சொல்லிய ________ செயல்.

## மாதிரி வினாத்தாள்

## தமிழ் இரண்டாம் தாள்

(உரைநடை - துணைப் பாடம் - செய்யுள் நயம் பாராட்டல் - தமிழாக்கம் - படைப்பாற்றல் - மொழித் திறன்)

காலம் : 3 மணி — மதிப்பெண் : 80

**I.** உரைநடை : 1 முதல் 4 பாடங்களில் பாடத்திற்கு ஒன்றாக ஐந்து (பெரு) வினாக்கள் கொடுக்கப்பெற்று மூன்றனுக்கு விடை எழுதச் செய்தல் வேண்டும். (3 x 4 = 12)

**II.** உரைநடை : 5 முதல் 8 பாடங்களில் பாடத்திற்கு ஒன்றாக ஐந்து (பெரு) வினாக்கள் கொடுக்கப்பெற்று மூன்றனுக்கு விடை எழுதச் செய்தல் வேண்டும். (3 x 4 = 12)

**III.** உரைநடை : 1 முதல் 4 பாடங்களில் (பெருவினாவுக்கு 2 வினாக்கள் தேர்வு செய்யப்பெற்ற பாடத்தை நீக்கிப் பிற பாடங்களிலிருந்து) ஒன்றும், 5 முதல் 8 பாடங்களில் (பெருவினாவுக்கு 2 வினாக்கள் தேர்வு செய்யப்பெற்ற பாடத்தை நீக்கிப் பிற பாடங்களிலிருந்து) ஒன்றுமாக இரு (நெடு) வினாக்கள் கொடுக்கப்பெற்று ஒன்றனுக்கு விடை எழுதச் செய்தல் வேண்டும். (1 x 6 = 6)

**IV.** துணைப்பாடம் : இரண்டு வினாக்களுக்கு - இரண்டிரண்டு பக்கங்களில் - விடை எழுதச் செய்தல் வேண்டும். (2 x 10 = 20)

1. கதைச் சுருக்கம் அல்லது உரையாடல் (நாடகம்) எழுதுதல்.
2. கதை மாந்தர் திறனாய்வு அல்லது கற்பனைக் கதை எழுதுதல்.

சிறு கதைகள் 1 - 6 வரை ஒரு பிரிவாகவும் 7 முதல் 12 வரை மற்றொரு பிரிவாகவும் கொண்டு - ஒவ்வொரு பிரிவிலும் வினா வகைக்கு ஏற்ப இரண்டிரண்டாகத் தேர்வு செய்து கொடுத்து - அந்த இரண்டில் ஒன்றுக்கு விடை எழுதச் செய்தல் வேண்டும், முதல் வினாவுக்கு (1-6) தேர்வு செய்தால், இரண்டாம் வினாவுக்கு (7-12) தேர்வு செய்யவும். முதல் வினாவுக்கு (7-12) தேர்வு செய்தால், இரண்டாம் வினாவுக்கு (1-6) தேர்வு செய்யவும்.

**V.** செய்யுள் நயம் பாராட்டல் : பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை, பாரதிதாசன். நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆகியவர்களுள் ஒருவர் இயற்றிய செய்யுளைக் கொடுத்தல் வேண்டும். செய்யுள் சொல். பொருள். எதுகை. மோனை. முரண். சந்தம். அணி முதலிய நயங்கள் சில அமைந்ததாக இருத்தல் வேண்டும். ஆசிரியர் பெயரைக் குறிப்பிடவும். (பொருள் 6 ஆக 10 மதிப்பெண்கள்)

**VI.** தமிழாக்கம் : பழமொழி, மரபுத் தொடர், உவமை, பலவகை வாக்கியங்கள் என ஆறு ஆங்கில வாக்கியங்கள் கொடுத்து, மூன்றனுக்குத் தமிழாக்கம் எழுதச் செய்தல் வேண்டும். (2 x 3 = 6)

**VII.** படைப்பாற்றல் : மூன்று பழமொழிகள் கொடுத்து ஒன்றனை வாழ்க்கை நிகழ்ச்சியோடு இணைத்து விளக்கிப் பத்து வரிகள் எழுதச் செய்தல் வேண்டும். அல்லது இரண்டு தலைப்புகள் கொடுத்து ஒன்றனுக்கு 8 அல்லது 10 அடிகளில். மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் வகையில் கவிதை ஒன்று எழுதச் செய்தல் வேண்டும். கவிதை சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துதல் வேண்டும். (4 மதிப்பெண்கள்)

**VIII.** மொழித்திறன் : 10 கொடுக்க வேண்டும். (எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்)
(10 மதிப்பெண்கள்)

## இரண்டாம் தாளின் இணைப்பு (பேசுதல் - கேட்டல் திறன்களின் ஆய்வு)

**Testing of aural - oral skills**

காலம் : 1 மணி மதிப்பெண் 20

1. வகுப்பில் ஒவ்வொரு மாணவனையும் / மாணவியையும் தனித்தனியே பேசச் செய்தல் வேண்டும். இச்சோதனைக்காக ஒருவருக்கு ஐந்து மணித் துளிகளை ஒதுக்க வேண்டும்.
(3 மதிப்பெண்)

அ. கொடுக்கப்பட்ட தலைப்பு பற்றிப் பேசச் செய்தல்

ஆ. நன்றியுரை அல்லது வரவேற்புரை கூறச் செய்தல்

இ. மலை, காடு, கடல் போன்ற இயற்கைப் பொருள்களுடன் ஏதேனும் ஒன்றைக் குறித்து உரையாற்றச் செய்தல்.

ஈ. வேலை வேண்டி வருதல் - மருத்துவரிடம் நோய் பற்றிக் கூறல் - கல்லூரியில் சேரச் செல்லும்போது நடக்கும் நேர்முகம் - புதிதாக ஓர் இடத்திற்குச் செல்ல வழி விசாரித்தல் - முதலானவை தொடர்பாக மாதிரி உரையாடல் ஒன்று.

2. ல, ள, ழ - ண, ன - ர, ற- வருக்க எழுத்துக்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ள செய்யுள்கள் (குறள்) நான்கைப் படிக்கச் செய்து, உச்சரிப்பைக் கவனித்து, மதிப்பெண் வழங்குதல் வேண்டும். அல்லது நான்கு அடி அளவில் அமைந்த செய்யுளைப் பொருள் புரியுமாறு படித்துக் காட்டச் செய்து. இரண்டொரு சொற்களுக்குப் பொருள் கேட்டு, மதிப்பீடு செய்தல் வேண்டும். (காலம் ஐந்து மணித் துளி)

(3 மதிப்பெணகள்)

இந்த ஆய்வுக்குப் பாடநூலின் செய்யுள் மற்றும் உரைநடைப் பகுதிகளில் கொடுக்கப்பெற்றுள்ள 'மொழித் திறன் வளர் பயிற்சி' பகுதியில் அமைந்துள்ள செய்யுள் மற்றும் உரைநடைப் பத்திகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# பொதுத் தமிழ்

# மாதிரி வினாத்தாள்

## பகுதி **I -** தமிழ் - இரண்டாம் தாள்

(உரைநடை., துணைப் பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

பதிவு எண்

## Language - Part I - Tamil Paper II

காலம் : 3 மணி மதிப்பெண் : 80

குறிப்பு : விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை எழுதுக.

**3 x 4 = 12**

1. நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாகச் சூரிய நாராயண சாத்திரியார் கூறுவன யாவை?
2. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு. வி. க. உரைப்பன யாவை?
3. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு. வி. க. வருந்தி உரைப்பன யாவை?
4. கவிதைக்குரிய நல்லியல்புகளாகக் கம்பன் உரைக்குமாற்றை வையாபுரிப் பிள்ளை வழி நிறுவுக.
5. பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை இளவழகனார் எவ்வாறு விளக்கியுள்ளார்?

**II.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை எழுதுக.

**3 x 4 = 12**

6. 'விரவுப் பெயராக இலக்கணத்திற் சொல்லப்படுவன மாடுகளின் பெரும்பயன் கருதியே' என்ற பாவாணர் கூற்றினை விளக்குக.
7. 'ஆயன்' என்ற பெயரே அரசனைக் குறிக்கும் 'கோ'எனப்பட்டது என்பதனைப் பாவாணர் எவ்வாறு விளக்கியுள்ளார்?
8. உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் நயமுண்டாகக் குறள் அமைத்திருப்பதைச் சிதம்பரநாதன் எவ்வாறு விளக்குகிறார்?
9. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை?
10. சோழர் காலத்துச் சிற்பிகளின் திறமையைப் புலப்படுத்துக.

**III.** பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு (இருபது வரிகளின் மிகாது) விடை எழுதுக.

**1 x 6 = 6**

11. 'தமிழ் - உயர் தனிச் செம்மொழி' இத்தலைப்பின் கீழ் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.
12. 'மனித வாழ்வே பெரியது' என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது?

**IV.** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களின் மிகாமல் விடை எழுதுக.

**2 x 10 = 20**

13. 'ஆயா' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'பால்வண்ணம் பிள்ளை' அல்லது 'வேலி' என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாகச் செய்க.

14. 'ஒவ்வொரு கல்லாய்' அல்லது 'மண்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க,

அல்லது

நீவிர் விரும்பிய ஒரு சுற்றுலாவுக்குச் செல்ல முடியாது தடையேற்பட்டு, அதனால் வருத்தம் எய்தியதாக ஒரு நிகழ்வைப் புனைந்தெழுதுக.

அல்லது

ஒரு திருவிழாக் கூட்டத்தில் வழி தவறி வந்த குழந்தையை அதன் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பாடுபட்டு வருந்தியதுபோல் கற்பனையாக ஒரு கதை எழுதுக.

**V.** 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து. அதில் அமைந்துள்ள கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து. அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச் சுவை, உவமை, உருவகம் கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1 x 10 =10**

எந்திர வித்தைகள் வேணது கற்றோம்
என்னென்ன மோபல புதுமைகள் பெற்றோம்
சந்திரன் செவ்வாய் மண்டலத் தோடும்
சங்கதி பேச வழிகளைத் தேடும்
அந்தமில் லாபல சக்திகள் உற்றும்
அடிதடி சண்டையை விட்டிட மட்டும்
தந்திரம் ஒன்று படித்திலம் ஐயோ
தரணியில் மக்கள் தவிப்பது பொய்யோ?

- *நாமக்கல் கவிஞர்.*

பின் வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. **3 x 2 = 6**

16. Time and tide wait for none.
17. Familiarity breeds contempt.
18. Slow and steady wins the race.
19. By hard work Japan has become number one in industry.
20. Television is one of the modern wonders of electronics.
21. Education should develop and promote good values.

**VII.** 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்து (பத்து வரிகளில்) எழுதுக. **1 x 4 = 4**

அ. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

ஆ. இக்கரைக்கு அக்கரைப் பச்சை.

இ. சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

அல்லது

'வான்மேகம்' (அல்லது) 'முரண்களின் ஒற்றுமையே இயற்கை' என்னும் தலைப்பில் சிந்தித்து, உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை (8 அடிகளுக்குக் குறையாது 10 அடிகளுக்கு மிகாது) எழுதுக.

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10 x 1 = 10**

23. மலர்க்கொடி அரும்பி மலர்ந்து மணம் பரப்பின.

(வாக்கியப் பிழையைத் திருத்துக)

24. ஏட்டு சுவடிகளில் சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.

(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டெழுதுக)

25. இலை, இழை (அல்லது) தினை, திணை - (பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக)

26. டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்,

(பிற மொழிச் சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

27. வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா?

(கொச்சையான வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக)

28. என் ஏக புத்திரனின் ஜானவாசத்திற்குச் சகலரும் வர வேண்டும்.

(பிறமொழிச் சொற் கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

29. சீத்தலைச் சாத்தனார் என்றப் புலவர் தமது காப்பியத்திற்கு மணிமேகலைத் துறவு என்றேப் பெயரிட்டார். (தேவையற்ற இடங்களிலுள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக)

30. கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது.

(மரபு வழுவை நீக்கி எழுதுக)

31. நெள் வயலில் கலை பரித்தபோது அறவு கடித்ததால் அலறினான்.

(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

32. சமயத்தை மதம் என்றும் குறிப்பிடுவர் மதம் என்பதற்குக் கொள்கையில் நிற்றல் என்பது பொருள்.
(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக)

## மேல்நிலை இரண்டாமாண்டு

### பகுதி I - தமிழ் -இரண்டாம் தாளின் இணைப்பு

### மாதிரி வினாத்தாள்

## Language - Part I Tamil Paper II

## Testing of Aural - Oral Skills

காலம் : 1 மணி மதிப்பெண் : 20

குறிப்பு : 1. வினா I, II ஆகிய இரு வினாக்களை மாணவ/ மாணவியர்களுக்குத் தனித்தனியே கொடுத்துச் சோதிக்க வேண்டும். இவ்வினாக்கள் மாணவருக்கு மாணவர் வேறுபட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் இச்சோதனைக்காகப் பத்து மணித்துளிகள் ஒதுக்கப்படல் வேண்டும்.

2. வினா III, IV, V ஆகிய மூன்று வினாக்களை அனைவருக்கும் பொதுவானதாகக் கொடுத்துத் தேர்வு நடத்த வேண்டும். (20 + 20 + 10) மணித் துளிகளை மட்டும் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாதிரி வினாத்தாள் : (வினாக்கள் I, II, III, IV, V) முதல் ஆண்டுக்குக் கொடுக்கப் பெற்றுள்ளதைக் காண்க.

விடைத்தாள் : முதல் ஆண்டுக்கு உள்ளது போல் தயாரித்துக் கொள்க.

வினா I (3 மதிப்பெண்), II (3 மதிப்பெண்), III (5 மதிப்பெண்), IV (5மதிப்பெண்), V (4 மதிப்பெண்)

இச்சோதனைக்குக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

I, II - வினாக்களை வகுப்பிலேயே (ஒவ்வொருவருக்கும் தனித்தனியே 5 + 5 – பத்து மணித்துளி வீதம் ஒதுக்கி) மதிப்பீடு செய்தல் வேண்டும்.

III, IV, V - வினாக்களை, தேர்வு எழுதுவோர் அனைவரையும் தனித்தனியே அமரச் செய்து, விடைத் தாள்களைக் கொடுத்து, (III, IV - வினாக்களுக்குரிய) பத்திகளையும் வினா. விடைகளையும் தனித்தனியே ஒரே ஒருமுறை மட்டும் (தேர்வு எழுதுவோரை மிகவும் கவனமாக இருக்குமாறு கூறிவிட்டுப்) படித்துக் காட்டி/பதிவு செய்யப்பட்டதாயின் ஒலிக்கச் செய்து விடைக்குரிய எண்களை மட்டும் விடைத்தாளில் எழுதச் செய்தல் வேண்டும்.

காலாண்டுத் தேர்வுக்குமுன் இருமுறையும், அரையாண்டுத் தேர்வுக்குமுன் இருமுறையும் மாணவர்களைச் சோதனை செய்தல் வேண்டும். இத்தேர்வுகளின் சராசரி மதிப்பெண்ணை (20 மதிப்பெண்ணுக்குச் சரி செய்து) காலாண்டு, அரையாண்டு ஆகிய இரு தேர்வுகளிலும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இறுதித் தேர்வுக்குமுன் (அரையாண்டுத் தேர்வுக்குப்பின்) ஒரு முறை சோதனை செய்தல் வேண்டும்.

நடத்தப்பெற்ற ஐந்து சோதனைகளின் சராசரியை (இருபது மதிப்பெண்ணுக்கு)க் கணக்கிட்டு, மதிப்பெண் பட்டியலைத் தலைமையாசிரியரிடம் ஒப்படைத்து. தேர்வுத்துறை ஆணையருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இச்சோதனைக்குப் பயன்படுத்தப்பட்ட வினாத்தாள்களையும் மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களையும் தலைமையாசிரியரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தலைமையாசிரியர் அதனைப் பாதுகாப்புடன் வைத்தல் வேண்டும்.

தனித் தேர்வாளர்களுக்கும், அவர்கள் தேர்வு எழுதும் மையத் தலைமையாசிரியர், தமிழாசிரியர்களின் உதவியுடன் இம்முறையில் ஒரு தேர்வை நடத்தி, விடைத் தாள்களைப் பாதுகாப்பதுடன் மதிப்பெண் பட்டியலைத் தேர்வுத்துறை ஆணையருக்கு அனுப்புதல் வேண்டும்.